APRIL 2026

62650/346C6C/344C6C/
345C6C/347C6C/
348C6C/351C6C/
318C6B

Time : Three hours Maximum : 75 marks

PART A — (10 × 2 = 20 marks)

Answer any TEN questions.

1. State the meaning of long term capital gain.

   நீண்டகால மூலதன ஆதாயம் என்பதன் பொருளைக் குறிப்பிடவும்.

2. What is the Cost of Improvement?

   மேம்படுத்துதலின் அடக்கம் என்றால் என்ன?

3. Explain the term "Casual Income".

   'தற்செயல் வருமானம்' என்ற பதத்தை விளக்கவும்.

4. What is meant by clubbing of incomes?

   வருமானங்களை ஒன்று சேர்த்தல் என்பதன் பொருள் யாது?

5. What is the carry forward of losses?

   நஷ்டங்களை முன்னெடுத்துச் செல்லுதல் என்றால் என்ன?

6. State any two donations for which 50% deductions are allowed.

   50% கழிவுகள் அனுமதிக்கப்படும் ஏதேனும் இரண்டு நன்கொடைகளைக் குறிப்பிடவும்.

7. What is Gross Total Income?

   மொத்தக் கூடுதல் வருமானம் என்றால் என்ன?

8. Explain the rebate under section 87A.

   பிரிவு 87 A-ன் கீழான தள்ளுபடியை விளக்கவும்.

9. Who is the Inspector of Income Tax?

   வருமான வரி ஆய்வாளர் என்பவர் யார்?

10. What is meant by filing of return?

வருமானவரித் தாக்கல் என்பதன் பொருள் யாது?

11. How are speculation losses set-off?

ஊக நஷ்டங்களை எவ்வாறு சரிகட்டுவாய்?

12. What is a dividend?

பங்காதாயம் என்றால் என்ன?

PART B — ($5 \times 5 = 25$ marks)

Answer any FIVE questions.

13. An agricultural land situated in Thanjavur district purchased in 2007-08 for 3,50,000 was sold on 15th July 2024 for 14,00,000. Another piece of land was purchased on 15th Dec. 2024 for 1,40,000 and on the same day Rs. 1,25,000 was deposited in the Capital Gains Deposit Account Scheme of a nationalized bank. Calculate taxable capital gain. [CII: 2007–08 129: 2024–25:363].

தஞ்சாவூரில் அமைந்துள்ள ஒரு விவசாய நிலம் 2007-08 ஆம் ஆண்டில் ரூபாய் 3,50,000 வாங்கப்பட்டதை, 15 ஜூலை 2024 அன்று ரூ. 14,00,000 க்கு விற்கப்பட்டது. மற்றொரு துண்டு நிலம் 15 டிசம்பர் 2024 அன்று ரூபாய் 1,40,000 க்கு வாங்கப்பட்டது மேலும் அன்றைய தினமே தேசிய மயமாக்கப்பட்ட வங்கியின் மூலதன ஆதாய வைப்பு கணக்கு திட்டத்தில் ரூ. 1,25,000 வைப்பு வைக்கப்பட்டது. வரி செலுத்தத்தக்க மூலதன ஆதாயத்தைக் கணக்கிடவும். [பணவீக்க அடக்க குறியீடு: 2007-08: 129; 2024-25: 363].

14. Mr. Dharman has acquired 1,000 12% Debentures of XY Ltd. @ 110 each on 13.12.2019. He sold all the debentures for 1,50,000 on 07.06.24. He paid 0.5% as brokerage. Compute his capital gain for the P.Y. 2024–25. [CII: 2019–20: 289; 2024–25:363].

திரு. தர்மன் என்பவர் 13.12.2019 அன்று ஒவ்வொன்றும் ரூ. 110 மதிப்புள்ள, 1000 XY லிட்டின் 12% கடன் பத்திரங்களை வாங்குகிறார். அவர், 07.06.2024 அன்று அவரின் அனைத்து கடன் பத்திரங்களையும் ரூபாய் 1,50,000 க்கு விற்கிறார். தரகாக அவர் 0.5% செலுத்துகிறார். முந்தைய 2024-25 ஆம் ஆண்டுக்கான அவரின் மூலதன ஆதாயத்தை கணக்கிடவும்.[பணவீக்க அடக்க குறியீடு: 2019–20:289; 2024– 25:363].

15. Ms. Preethi received the following gift during the P.Y 2024–25. Compute her taxable income from other sources.

(a) Received 20,000 as gift from her friend

(b) Received 60,000 as gift from her sister

(c) Received Rs. 1,00,000 as marriage gift

(d) Received Rs. 35,000 as gift from her friend

(e) Received a necklace (worth Rs. 1,20,000) as a gift from her father.

திருமிகு. ப்ரீத்தி முந்தைய 2024-25 ஆம் ஆண்டில் கீழ்கண்ட பரிசுகளை பெறுகிறார். அவரின் இதர மூலங்களின் வருமானத்தைக் கணக்கிடவும்.

(அ) தனது நண்பரிடம் இருந்து ரூபாய் 20,000 பரிசாக பெற்றார்

(ஆ) அவருடைய சகோதரிடமிருந்து ரூபாய் 60,000 பரிசாக பெற்றார்

(இ) திருமண பரிசாக ரூபாய் 1,00,000 பெற்றார்

(ஈ) அவரின் நண்பரிடமிருந்து ரூபாய் 35,000 பரிசாக பெற்றார்

(உ) அவரின் தந்தையாரிடமிருந்து பரிசாக (ரூபாய் 1,20,000 மதிப்புள்ளது) தங்க ஆபரண கழுத்துப் பட்டையை பெற்றார்.

16. Mr. Ragunath received the following incomes during the P.Y 2024-25. Compute his taxable income from other sources.

(a) Family pension received Rs. 30,000

(b) Royalty amount received Rs. 15,000

(c) Honorarium received for delivering lectures Rs. 3,000

(d) Director's fee Rs. 5,000

(e) Expenses incurred to earn royalty Rs. 2,000.

முந்தைய 2024-25 ஆம் ஆண்டில் திரு ரகுநாத் என்பவர் கீழ்க்கண்ட வருமானங்களைப் பெற்றார். அவரின் இதர மூலங்களில் வருமானத்தைக் கணக்கிடவும்.

(அ) குடும்ப ஓய்வூதியம் பெறப்பட்டது ரூ. 30,000

(ஆ) உரிமைத் தொகை பெறப்பட்டது ரூ. 15,000

(இ) விரிவுரை ஆற்றியதற்காக கௌரவ ஊதியம் பெறப்பட்டது ரூ. 3,000

(ஈ) இயக்குனர் கட்டணம் ரூ. 5,000

(உ) உரிமைத் தொகை பெறுவதற்காக செலவுகள் மேற்கொள்ளப்பட்டது ரூ. 2,000

17. Mr. Mayilsamy has furnished the following particulars. Compute his gross total income for the previous year 2024–25.

(a) Income from salary Rs. 89,000

(b) Income from other sources Rs. 42,000

(c) Short term capital loss Rs. 22,000

(d) Long term capital loss Rs. 17,000

(e) Loss from business Rs. 60,000.

திரு. மயில்சாமி கீழ்க்கண்ட தகவல்களை தருகிறார். முந்தைய 2024-25 ஆம் ஆண்டுக்கான அவரின் மொத்த கூடுதல் வருமானத்தைக் கணக்கிடவும்.

(அ) சம்பள வருமானம் ரூ. 89,000

(ஆ) இதர மூலங்களின் வருமானம் ரூ. 42,000

(இ) குறுகிய கால மூலதன நஷ்டம் ரூ. 22,000

(ஈ) நீண்ட கால மூலதன நஷ்டம் ரூ. 17,000

(உ) வியாபார நஷ்டம் ரூ. 60,000.

18. From the following particulars, calculate taxable income and tax liability of Mr. Nanda for the previous year 2024–25.

Particulars	Rs.
Income from salary (computed)	6,00,000
Income from house property	60,000
Income from other sources	1,20,000
Donation to National Defence Fund	10,000

கீழ்க்கண்ட தகவல்களில் இருந்து முந்தைய ஆண்டு 2024-25 ஆம் ஆண்டுக்கான திரு நந்தா என்பவரின் வரி செலுத்தத்தக்க வருமானத்தையும் மற்றும் வரி பொறுப்புகளையும் கணக்கிடவும்.

விவரங்கள்	ரூ.
சம்பள வருமானம் (கணக்கிடப்பட்டது)	6,00,000
வீட்டு சொத்தில் இருந்து வருமானம்	60,000
இதரமூலங்களின் வருமானம்	1,20,000
தேசிய பாதுகாப்பு நிதிக்கு நன்கொடை கொடுத்தது	10,000

19. Explain the benefits of tax credit statements.

வரிக் கடன் அறிக்கையின் பயன்களை விளக்கவும்.

PART C — ($3 \times 10 = 30$ marks)

Answer any THREE questions.

20. Calculate capital gain from the following particulars given by Mr. Elavarasan for the previous year, if CII for 2024–25: 363, 2012–13: 200, 2001–02: 100.

Cost of residential house	Rs. 5,40,000
FMV as 01.04.2001	Rs. 5,40,000
Date of purchase	01.10.1999
Date of sale	01.10.2024
Sales value	Rs. 30,00,000
Cost of improvement	Rs. 90,000
Date of improvement	01.10.2012
Stamp duty and legal charges	Rs. 50,000

The assessee has purchased another residential house within one year for Rs. 8,00,000.

பணவீக்க அடக்க குறியீடு 2024-25 க்கு: 363, 2012-13 க்கு: 200, 2001-02 க்கு: 100 எனும் பட்சத்தில், முந்தைய ஆண்டுக்கு திரு. இளவரசன் அவர்களால் கொடுக்கப்பட்ட கீழ்கண்ட தகவல்களில் இருந்து மூலதன ஆதாயத்தைக் கணக்கிடவும்.

குடியிருப்பு வீட்டின் அடக்கம்	ரூ. 5,40,000
01.04.2001 அன்றின் நியாய சந்தை மதிப்பு	ரூ. 5,40,000
வாங்கிய தேதி	01.10.1999
விற்றதின் தேதி	01.10.2024
விற்பனை மதிப்பு	ரூ. 30,00,000
மேம்படுத்துதலின் அடக்கம்	ரூ. 90,000
மேம்படுத்தப்பட்டதின் தேதி	01.10.2012
முத்திரை வரி மற்றும் சட்ட கட்டணம்	ரூ. 50,000

வரிவிதிப்புக்குரியவர் ஒரு வருடத்திற்குள் இன்னொரு குடியிருப்பு வீட்டை ரூ. 8,00,000 ற்கு வாங்கினார்.

21. The following incomes are received by Mr. Anbu during the financial year 2024–25.

	Rs.
Directors' fees	2,000
Income from agricultural land in Srilanka	5,000
Ground rent for land in Mysore	10,000
Interest on post office savings bank account	100
Interest on deposits with IFCI	500
Dividend from foreign company	700
Rent from house (sub-let)	26,250
Rent paid by Anbu (On the sub–let house)	13,000
Winnings from horse race	12,300
Interest on securities	4,000

Compute the income from other sources of Mr. Anbu, for the P.Y 2024–25.

2024-25 நிதியியல் ஆண்டில், கீழ் உள்ள வருமானங்கள் திரு. அன்பு அவர்களால் பெறப்பட்டதாகும்.

	ரூ.
இயக்குனர் கட்டணம்	2,000
ஸ்ரீலங்காவில் உள்ள விவசாய நிலத்தில் இருந்து வருமானம்	5,000
மைசூரில் உள்ள இடத்திலிருந்து தரை வாடகை	10,000
அஞ்சல் அலுவலக சேமிப்பு வங்கிக் கணக்கின் மீதான வட்டி	100
IFCI- உடனான வைப்பின் மீதான வட்டி	500
அயல் நாட்டு நிறுமத்தில் இருந்து பங்காதாயம்	700
வீட்டிலிருந்து வாடகை (உள்வாடகை விடப்பட்டது)	26,250
அன்பு அவர்களால் செலுத்தப்பட்ட வாடகை (உள் வாடகை விடப்பட்ட வீட்டிற்கு)	13,000
குதிரை பந்தயத்தில் வென்றது	12,300
பிணையங்கள் மீதான வட்டி	4,000

முந்தைய 2024 - 25 ம் ஆண்டுக்கான திரு அன்பு என்பவரின் இதர மூலங்களின் வருமானத்தை கணக்கிடவும்.

22. Mr. Chezhiyan's G.T.I. is Rs. 5,00,000 and he has made the following donations. Compute his total income for the previous year 2024–25.

(a) Africa fund Rs. 10,000

(b) National Sports Fund Rs. 30,000

(c) Donation to approved educational institutions Rs. 25,000

(d) Donation to temples for repairs Rs. 35,000

(e) Donation to the municipal corporation for family planning Rs. 28,000.

திரு. செழியன் அவர்களின் மொத்த கூடுதல் வருமானம் என்பது ரூபாய் 5,00,000 ஆகும் மற்றும் அவர் கீழ்க்கண்ட நன்கொடைகளை மேற்கொண்டார். முந்தைய 2024-25 ஆம் ஆண்டுக்கான அவரின் மொத்த வருமானத்தை கணக்கிடவும்.

(அ) ஆப்பிரிக்க நிதி ரூ. 10,000

(ஆ) தேசிய விளையாட்டு நிதி ரூ. 30,000

(இ) அனுமதிக்கப்பட்ட கல்வி நிலையங்களுக்கு நன்கொடை ரூ. 25,000

(ஈ) பழுது பார்ப்பிற்காக கோவில்களுக்கு நன்கொடை ரூ. 35,000

(உ) குடும்பக் கட்டுப்பாட்டிற்காக மாநகராட்சிக்கு நன்கொடை ரூ. 28,000

23. Mr. Nagaraj has furnished the following details regarding his income during the previous year 2024–25. You are required to ascertain his total income and tax liability under regular tax regime and alternative tax regime (Sec. 115BAC).

Income from salary (gross) Rs. 9,00,000

Income from house property (computed) Rs. 60,000

Interest received on time deposit with SBI Rs. 54,000

He contributed to RPF Rs. 1,80,000 (10% of his salary) and paid Rs. 10,000 as premium on his life insurance policy.

He paid medical insurance premium for self by cheque Rs. 20,000.

திரு. நாகராஜ் என்பவர் முந்தைய 2024-25 ஆம் ஆண்டில் அவரின் வருமானம் தொடர்பான கீழ்கண்ட விவரங்களைத் தருகிறார். வழக்கமான வரிமுறை மற்றும் மாற்று வழிமுறையின் (பிரிவு 115 BAC) கீழ், அவரின் மொத்த வருமானத்தையும் மற்றும் வரி பொறுப்புகளையும் தாங்கள் தீர்மானிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

சம்பள வருமானம் (மொத்தம்) ரூ. 9,00,000

வீட்டு சொத்தில் இருந்து வருமானம் (கணக்கிடப்பட்டது) ரூ 60,000

பாரத ஸ்டேட் வங்கி கால வைப்பின் மீது பெறப்பட்ட வட்டி ரூ. 54,000

அங்கீகரிக்கப்பட்ட சேமநல நிதிக்கு அவரின் பங்களிப்பு ரூ. 1,80,000 (அவன் சம்பளத்தில் 10%) மற்றும் அவரின் ஆயுள் காப்பீட்டு திட்டத்தின் மீதான முனைமம் செலுத்தியது ரூபாய் 10,000.

அவர், தனக்கான மருத்துவ காப்பீட்டு முனைமம் காசோலையில் செலுத்தியது ரூ. 20,000.

24. Analyse the Powers of the Central Board of Direct Taxes.

மத்திய நேரடி வரிகள் வாரியத்தின் அதிகாரங்களை ஆராயவும்.

———————